**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**முன்னிலை: திருமதி.R.D.குருலட்சுமி M.A.,M.L., PGDI & CL.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2023ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ம் நாள் வெள்ளிக்கிழமை**
**திருவள்ளுவர் ஆண்டு, 2054, சோபகிருது வருடம், வைகாசி மாதம் 19 ம் நாள்**
**இடைநிலை மனு எண் - 7/2022**
**இன்**
**முதலேற்பு வழக்கு எண். 69/2019**

---

செல்வராஜ் ---மனுதாரர்/1ம் பிரதிவாதி

/எதிர்/

அருள்மிகு மொட்டையசாமி திருகோயில்
திருப்புவனம் புதூர்.அதன் மேனேஜிங்
டிரஸ்டி உய்யாராணி என்பவர் மூலம் ....... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் 24.11.2022 அன்று என்முன்பாக இறுதி விசாரணைக்காக வந்த போது, மனுதாரர்/1ம் பிரதிவாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பி.ஆதிமூலம், திருமதி.என்.ஆர்.சரஸ்வதி ஆகியோர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஜி.சங்கர்கணேஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுவுடன் தாக்கல் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள அனுமதி கோரி, மனுதாரரால் மனு தாக்கல்.

**1. மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம்:**

அசல்வழக்கில் மனுதாரர்தரப்பில் தாக்கல் செய்ய வேண்டிய முக்கியமான ஆவணங்கள் வீட்டில் உள்ள பழைய ஆவணங்களுடன் கலந்து விட்டதால் குறிப்பிட்ட காலத்திற்குள் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், அவை வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்றும், எனவே மேற்படி ஆவணங்களை உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யாத, காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக் கொண்டு மனுவுடன் தாக்கல் ஆவணங்களை ஏற்றுக் கொள்ள அனுமதி கோரி மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரரின் மறுப்புரையின் சுருக்கம்:-**

மனு ஆட்சேபிக்கப்படுகிறது. அசல்வழக்கானது 05.03.1999 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல்

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2023.06.02 15:29:47 +0530

செய்யப்பட்டுள்ளது. புலஎண்93/1 குடும்ப சொத்து என்றும், பட்டாவை அடிப்படையாகக் கொண்டு மனுதாரர் பாத்தியம் கோரிய நிலையில் சென்னை மாண்பமை உயர்நீதிமன்ற ரிட் மனு எண் 21540/2016 ன் படி தனிநபர்களுக்கு வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டுள்ளது. 6 முதல் 9 வரையிலான பட்டியல் ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் பெயருக்கே பட்டா மாற்றப்பட்டுள்ளது. பட்டியல் ஆவணங்கள் 7 முதல் 15, 22, 23 வழக்கிற்கு பிந்தியவை. பட்டியல் ஆவணங்கள் 22, 23 வழக்கிற்கு சம்மந்தமற்றவை. பட்டியல் ஆவணம் 18 புல எண்.97/7 க்குரியது. எனவே வழக்கிற்கு சம்மந்தமில்லாதது. பட்டியல் ஆவணம் 7 முதல் 15 ஆனது ரத்து செய்யப்பட்ட பட்டாவின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது. பட்டியல் ஆவணம் 4, 21 வழக்கிற்கு பிந்தியவை. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**3.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி என்பது மனுதாரர் கோரும் பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**4.** அசல்வழக்கில் மனுதாரர்தரப்பில் தாக்கல் செய்ய வேண்டிய முக்கியமான ஆவணங்கள் வீட்டில் உள்ள பழைய ஆவணங்களுடன் கலந்து விட்டதால் குறிப்பிட்ட காலத்திற்குள் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், அவை வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்றும், எனவே மேற்படி ஆவணங்களை உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யாத, காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக் கொண்டு மனுவை அனுமதிக்கக் கோரி வாதிடப்பட்டது. சென்னை மாண்பமை உயர்நீதிமன்ற ரிட் மனு எண் 21540/2016 ன் படி தனிநபர்களுக்கு வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே 6 முதல் 9 வரையிலான பட்டியல் ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், எதிர்மனுதாரர் பெயருக்கே பட்டா மாற்றப்பட்டுள்ளது என்றும், பட்டியல் ஆவணங்கள் 7 முதல் 15, 22, 23 வழக்கிற்கு பிந்தியவை என்றும், பட்டியல் ஆவணங்கள் 22, 23 வழக்கிற்கு சம்மந்தமற்றவை என்றும், பட்டியல் ஆவணம் 18 புல எண்.97/7 க்குரியது என்றும், எனவே வழக்கிற்கு சம்மந்தமில்லாதது என்றும், பட்டியல் ஆவணம் 7 முதல் 15 ஆனது ரத்து செய்யப்பட்ட பட்டாவின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது என்றும், பட்டியல் ஆவணம் 4, 21 வழக்கிற்கு பிந்தியவை என்றும், எனவே அசல் வழக்கின் விசாரணையை கால தாமதப்படுத்த இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே, மனுதாரர் மனுவை தள்ளுபடி செய்ய கோரி வாதிடப்பட்டது.

**5.** இவ்வழக்கில் வாதிதரப்பில் வா.சா.1 விசாரணை செய்யப்பட்டு, கூடுதல் விசாரணைக்காக வழக்கு நிலுவையில் இருந்த நிலையில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்கள் இவ்வழக்கில் சம்மந்தம் இல்லாதவை என்று ஆட்சேபனை செய்யப்பட்டாலும், மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் வழக்கிற்கு முக்கிய ஆவணங்கள் என்று சொல்லப்பட்டுள்ள நிலையிலும், ஆவணங்களின் செல்லும்தன்மை குறித்து அசல்வழக்கில் தீர்மானிக்கும் இயலும் என்ற

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2023.06.02 15:30:04 +0530

நிலையிலும், இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தர்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2023-ம் ஆண்டு ஜூன் மாதம் 2 -ம் நாள் வெள்ளிக்கிழமை திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2023.06.02 15:30:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ::** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் :** இல்லை

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2023.06.02 15:30:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.